A

# அறிவித்தல்

இலங்கை நிலைபேறுதகு அபிவிருத்தி சட்டமூலம் தொடர்பாக அறிவித்தலொன்றை செய்ய விரும்புகின்றேன்.

இச்சட்டமூலம் 2017 சனவரி மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு அரசியலமைப்பின் 154 எ(5)(அ) உறுப்புரையின் பிரகாரம் ஒவ்வொரு மாகாணசபைக்கும் ஆற்றப்படுத்தப்பட்டதன் பின்னர், 2017 சனவரி 10 ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள் அந்தந்த மாகாணசபைகளின் கருத்துக்களைப் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 46அ(2)(அ) ஆம் இலக்கத்தின் கீழ் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது.

இது தொடர்பாக மாகாணசபைகளின் கருத்துக்கள் பாராளுமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதோடு அவை பின்வருமாறு உள்ளன:-

- அதன் பிரகாரம் வட மத்திய மாகாண சபை சட்டமூலத்தை பரிசீலித்ததன் பின்னர் அச்சட்டமூலம் தொடர்பாக அம்மாகாண சபையின் உடன்பாட்டைத் தெரிவித்துள்ளது.
- மத்திய, வடமேல், சபரகமுவ, தென், மேல் மற்றும் ஊவா ஆகிய மாகாண சபைகள் சட்டமூலத்தை பரிசீலித்து, திருத்தங்களுக்குட்பட்டு அம்மாகாண சபைகளின் உடன்பாட்டைத் தெரிவித்துள்ளன.
- வட மாகாண சபை இச்சட்டமூலத்திற்கு தனது உடன்பாட்டை தெரிவிக்கவில்லையென்பதோடு, கிழக்கு மாகாணசபை அரசியலமைப்பு திருத்தமொன்று கொண்டுவரப்படும் வரை பரிசீலனையை தாமதப்படுத்துவதாகவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

ஒவ்வொரு மாகாண சபைகளிடமும் பெறப்பட்ட கருத்துக்கள் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருக்கும் பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவிற்கும் ஆற்றுப்படுத்தப்படும்.